20.02.2026 O.S. 107/2018 பி.வா.சா 1 ராமகிருஷ்ணன்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு **19 ம்பிரதிவாதி தரப்பில்** குறுக்குவிசாரணை

என் அப்பா பெயர் பிரமுத்து செட்டியார் ஆகும். என் அப்பாவுடன் பிறந்தவர்கள் 3 நபர்கள் ஆவார்கள். முத்தையா, சுப்பையா, பிரமுத்து ஆவார்கள். என் தாத்தா பெயர் வேலு ஆகும். வேலுவிற்கு என் தகப்பனாரும், மற்றும் அவருடன் பிறந்த சகோதரர்கள் இருவர் வாரிசுகள் ஆவார்கள். வேலுவுடன் உடன்பிறந்தவர்கள் 3 நபர்கள் ஆவார்கள். அவர்கள் பெயர் தெரியுமா என்றால் மாசானம், அய்யம்பெருமாள் ஆகும். மாசானத்திற்கு இரண்டு மகன்கள் ஆவார்கள். அவர்கள் பெயர் ஆதினம், சுடலை ஆகியோர்கள் ஆகும். சுடலை அவரது சொத்தை பொறுத்து கோவிலுக்கே விட்டு கொடுத்து விட்டார். மொத்தம் இரண்டு கல் செக்குகள் இருந்தது. தற்போது ஒரு செக் மட்டும் தான் உள்ளது. அந்த செக் தற்போது பயன்பாட்டில் இல்லை. அந்த பயன்பாட்டில் இல்லாத செக்கை பயன்படுத்தலாம். ஒத்தபனையான் கோவிலில் சப்பாணி மடம் பீடமும், உண்டியலும் கீழ்செக் இருந்த தென்கீழ் பகுதியில் இருந்தது. என் தகப்பனார் பிறப்பதற்கு முன்பே உள்ளது.

**வாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

வழக்கு எதற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று தெரியுமா என்றால் தெரியும். சொத்து சம்பந்தமாக தாக்கல் செய்துள்ளார்கள். நான் பிறந்தது, வளர்ந்தது அனைத்தும் ஆயிரப்பேரி ஆகும். என் அப்பா பிறந்தது, வளர்ந்த்து அதே ஆயிரப்பேரியில் என்றால் சரிதான். நான் கீழப்பாவூர் ஒத்தபனையடியான் கோவிலுக்கு நான் சாமியாடியாக

உள்ளேன். நான் 5ம் வகுப்பு வரை படித்துள்ளேன். வழக்கில் வாதிகள், பிரதிவாதிகள் யார் என்று எனக்கு தெரியுமா என்றால் வாதி வள்ளியம்மாள் தாக்கல் செய்துள்ளார். யார் யார் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் தெரியாது. இந்த வழக்கிற்கு பதில் அறிவிப்பு தாக்கல் செய்தது நான் தான் என்றால் சரிதான். நான் வழக்கறிஞரை பார்த்துள்ளேன். முதல் விசாரணை வாக்குமூலம் நான் சொல்லி தான் தாக்கல் செய்யப்பட்டது. நான் ஏற்கனவே கூறிய வாரிசுகளுக்கும் இந்த வழக்கிற்கும் என்ன சம்பந்தம் என்றால் எந்த சம்பந்தமும் இல்லை. நான் ஒத்தபனையடியான் கோவிலுக்காக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் செக்கில் உள்ள மனையில் எனது தாத்தாவிற்கும் பாகம் உள்ளதால் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். எனக்கு பாகம் வேண்டாம். கோவிலுக்கு பாகம் வேண்டும் அதற்காக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். கோவிலில் மக்கள் சாமி கும்பிடுவதை யாராவது தடுத்தார்களா என்றால் இல்லை. எனக்கு பங்கு உள்ளது என்பதை காட்டுவதற்கு எந்தவிதமான ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வழக்குசொத்தின் சர்வே எண், பரப்பு தெரியுமா என்றால் தெரியாது. கோவில் கட்டப்பட்டுள்ள சர்வே எண், பரப்பு தெரியுமா என்றால் தெரியாது. வாதிகளுக்கும், 1ம் பிரதிவாதிக்கும் இடையே உள்ள சொத்துக்களை பொறுத்து வழக்கு நடைபெறுகிறது என்றும் அதனை பொறுத்து எனக்கு ஆட்சேபனை இல்லை என்றால் சரிதான். அவர்களுக்கு பாகம் பிரித்து கொடுப்பதற்கு எனக்கு ஆட்சேபனை இல்லை என்றால் ஆட்சேபனை இல்லை. ஆதியில் ஒத்தபனையடியான் கோவிலுக்கு இடமே இல்லாமல் இருந்தது என்றால் எனக்கு தெரியாது. கோவிலுக்கு முன்னர் சப்பாணி மாடசாமி மற்றும்

உண்டியலும் உள்ளது. கோவில் எப்போது உருவாக்கப்பட்டது, யாரால் உருவாக்கப்பட்டது , அதன் சொத்து விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். கோவிலுக்கு கீழ்பக்கம் உள்ள இடம் ஆதியில் ஆண்டி என்பவருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். ஆண்டி என்பவருக்கு பிரம்மன், முத்து, பெருமாள், அருணாசலம், ராமன் ஆகியோர்கள் வாரிசுகள் என்றால் கேள்விபட்டுள்ளேன். ஆண்டி 1925 ம் இறந்து விட்டார் என்றால் சரிதான். ஆண்டிக்கு முன்னரே அவரது மனைவி இறந்து விட்டார் என்றால் சரிதான். ஆண்டி இறந்தபிறகு அவரது சொத்துக்களை பொறுத்து 5 ஆண் மகன்களும் அனுபவம் செய்து வந்தார்கள் என்றால் சரிதான். ஆண்டி சொத்திற்கு மேல்புறம் மற்றொரு ஆண்டி என்பவரின் சொத்து இருந்தது என்றால் எனக்கு தெரியாது. ஆண்டி என்பவருக்கு தனஷ்கோடி, ஆறுமுகம் என இரண்டு பிள்ளைகள் இருந்தார்கள் என்றால் சரிதான். கீழப்பாவூரில் வசிக்கும் வணிகவைசிய செட்டியாருக்கு கோவிலுக்காக ஒத்தபனையடியான் பெயரில் ஒரு சொத்தை வாங்கினார்கள் என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்பட்ட ஆவணமானது ஒத்தபனைடியான் கோவில் பெயரில் வாங்கப்பட்ட சொத்து என்றால் சரிதான். 13.12.1930 தேதியிட்ட கிரைய ஆவணத்தின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ 4 ஆகும். அந்த சொத்து வாங்கும் போது அந்த சொத்திற்கு கீழ்பக்கம் ஆண்டி என்பவரின் சொத்து இருப்பதாக எல்கைமால் காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். முத்து செட்டியார் என்பவர் எனது தாத்தாவின் அப்பா ஆவார். முத்து செட்டியார் என் தாத்தாவின் அப்பா என்பதை காட்டுவதற்கு ஏதேனும் ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. ஆண்டிக்கு பாத்தியப்பட்ட சொத்தில் அவரது வாரிசுகளுக்கு தலா 1 பாகம் உள்ளது என்றால்சரிதான்.

மேல்பக்கம் உள்ள கல்செக்கை பிரம்மன், ராமன், அருணாசலம் ஆகியோர்கள் அனுபவம் செய்து வந்தார்கள் என்றால் சரிதான். கீழ்புறமுள்ள செக்கை மற்ற இரண்டு நபர்கள் அனுபவம் செய்து வந்தார்கள் என்றால் சரிதான். மேல்பக்க செக்கை அனுபவம் செய்த பிரம்மன், ராமன், அருணாசலம் ஆகியோர்கள் ஒத்தபனையடியான் கோவிலுக்கு சொத்தை கொடுத்து விட்டார்கள் என்றால் சரிதான். அவ்வாறு பாகம் பிரித்ததில் மேற்கண்ட மூன்றுநபரும் 1950ம் ஆண்டு கோவிலுக்கு கொடுத்துவிட்டார்கள் என்றால் சரிதான். தற்போது அதன் நிர்வாகிகள் கோவிலை கட்டியுள்ளார்கள் என்றால் சரிதான். அதில் 10 வருடத்திற்கு முன்பு மண்டபமும் கட்டப்பட்டுள்ளது. ஆண்டி மகன் பெருமாள் என்பவருக்கு ஒரே மகள் பேச்சியம்மாளுக்கு தனது 5ல்1 பாகத்தை நன்கொடையாக கொடுத்துவிட்டார் என்றால் சரிதான். அந்த சொத்தை பேச்சியம்மாள் அனுபவம் செய்து வந்து அவர் இறந்து விட்டார் என்றால் சரிதான். பேச்சியம்மாளுக்கு பிரமு அம்மாள் என்ற ஒரு மகள் உண்டு என்றால் சரிதான். பேச்சியம்மாள் சொத்தை அவரது மகள் பிரமு அம்மாள் அனுபவம் செய்து வந்தார் என்றால் சரிதான். பிரமு அம்மாள் ஒரே மகன் ஜெயராம் பண்டாரம் என்றால் சரிதான். ஜெயராம் மனைவி பெயர் வள்ளியம்மாள் என்றால் சரிதான். வள்ளியம்மாள் மற்றும் ஜெயராம் பண்டாரத்திற்கு 5 பெண்பிள்ளைகள் என்றால் சரிதான். அவர்கள் சுப்புலட்சுமி, திருமலைச்செல்வி, பூரணம், பிரேமா, முத்து மாரி ஆகியோர்கள் வாரிசுகள் என்றால் சரிதான். அந்த சொத்துக்களை ஜெயராம் பண்டாரத்தின் மனைவி மற்றும் அவரது மகள்கள் 5 பேரும் அனுபவம் செய்து வந்தார்கள் என்றால் சரியல்ல. முத்து என்பவரின் மகன்

பெயர் மாசானம் என்றால் சரிதான். மாசானம் மகன் பெயர் ஆதினம் என்றால் சரிதான். ஆதினம் மனைவி பெயர் பாப்பாத்தியம்மாள் என்றால் சரிதான். ஆதினத்திற்கு இரண்டு பிள்ளைகள் கோபால். முத்தையா என்றால் சரிதான். அந்த இரண்டு பேரும் 12.2.1969 ம் ஆண்டு 5 ல்1 பங்கை நரசிங்கம் என்பவருக்கு கிரையம் கொடுத்து விட்டார் என்றால் சரிதான். ரூ.50/–க்கு விற்பனை செய்துள்ளார். அந்த சொத்தை கிரையம் பெற்ற நபர்கள் தான் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. செக்கை ஒருமுறை பயன்படுத்தி கொள்ளலாம் என கூறப்பட்டுள்ளது. வா.சா.ஆ 2 ன்படி கிரையம் பெற்ற நரசிங்கம் அனுபவித்து வந்தார் என்றால் சரிதான். 22.8.2014 ல் நரசிங்கம் இறந்து விட்டார்என்றால் சரிதான், நரசிங்கம் மனைவி பெயர் திருமலையாச்சி என்றால் சரிதான். நரசிங்கத்திற்கு வள்ளியம்மாள், மாரியப்பன் ஆகியோர்கள் வாரிசுகள் என்றால் சரிதான். அந்த வள்ளியம்மாள் இந்த வழக்கின் 1ம் வாதி, மாரியப்பன் வழக்கில் 1ம் பிரதிவாதி என்றால் சரிதான். வழக்கு சொத்தில் வாதிகளுக்கும், 1ம் பிரதிவாதிக்கு மட்டுமே பாகம் உள்ளது என்றால் பாகம் உள்ளது. செக்கை அட்டிக்கொள்ள மட்டுமே உரிமையுள்ளது. எனக்கு தெரிந்து கடந்த 30 வருடங்களாக செக் பயன்படுத்தாமல் உள்ளது. மாரியப்பனிடம் வாதிகள் அனைவரும் பாகம் கேட்டு பதில் சொல்லாததால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மாரியப்பன் வாதிகளின் பாகத்தை கொடுக்க வேண்டும் என்றால் செக்கில் மட்டும் தான் பாகம் உள்ளது. எதிர்வழக்குரை பாரா 3 ல் 100 ஆண்டுகளுக்கு முன்னரே கோவில் அமைந்துள்ளதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எனது தகப்பனார் சொல்லியுள்ளார். 100 ஆண்டுகளுக்கு முன்பே

கோவில் கட்டப்பட்டது என்பதை காட்டுவதற்கு எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். கல் செக் என்பது தனியார் சொத்தில் வைத்து தான் பயன்படுத்த முடியும் என்றால் சரிதான். மற்றவர்கள் இடத்தில் கல்செக் பயன்படுத்த முடியாது என்றால் சரிதான். சப்பாணி மாடன் பீடம் எந்த இடத்தில் உள்ளது என்றால் தென்கிழக்கில் மரத்திற்கு கீழ் உள்ளது. ஆண்டி மகன் முத்து என்பவர் கோவிலில் 60 ஆண்டுகளாக நிர்வாகம் செய்து வந்ததை காட்டுவதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. 100 ஆண்டுகளுக்கு முன்பே ஒத்தபனையடியான் கோவில் இருந்ததற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். கோவிலை கும்பிட்டுள்ளார்கள். அது தெரியும். செக்கில் எண்ணெய் எடுத்து கோவிலுக்கு கொடுத்தற்கு ஆவணம் உள்ளதா என்றால் இல்லை. 55 ஆண்டுகளாக சண்முகநாதன் என்பவர் தலைவராக இருந்தார் என்பதை காட்டுவதற்கான ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆவணம் இல்லை. கோவிலுக்கு முன் முகப்பு மண்டபத்தின் கிழக்கே பந்தல் போடுவதற்கு உரிமையாளரிடம் கேட்டால் அனுமதிப்பார்கள் என்றால் சரிதான். பிரமு அம்மாள் சுமார் 60 ஆண்டுகளுக்கு முன்பு தனக்குரிய 1 ல்5 பாகத்தை கோவிலுக்கு விட்டு கொடுத்ததாக கூறும் நிலையில் அதற்கான தேதி தெரியுமா என்றால் தெரியாது. பேச்சியம்மாள் அவரது பாகத்தை கோவிலுக்கு விட்டு கொடுத்ததாக கூறுவதற்கு ஆவணம் உள்ளதா என்றால் இல்லை. வாய்மொழியாக விட்டுக்கொடுத்தார். அவ்வாறு விட்டு கொடுத்த சொத்தின் மதிப்பு ரூ.5 ஆயிரம் இருக்குமா என்றால் இருக்கும். முத்து என்பவருக்கு யார் யார் வாரிசுகள்என்று தெரியுமா என்றால் தெரியும்.

மாசானம், வேல், அய்யம்பெருமாள் ஆகியோர்கள் வாரிசுகள் ஆவார்கள். உண்டியல் வழக்கு சொத்திற்கு கிழக்கே புறம்போக்கு இடத்தில் உள்ளது என்றால் சரியல்ல. சாமிக்கு அருகில் உண்டியல் உள்ளது. 28.8.1963 ல் இறங்கொத்தி யார் யாருக்கு கொடுக்கப்பட்டது என்றால் நரசிங்கம் என்பவர் பாப்பாத்தியம்மாள் கொடுத்துள்ளார். செக்கை பயன்படுத்துவதற்காக கொடுக்கப்பட்டது. ஒத்தி வாங்கிய நபரால் பணத்தை திருப்பி கொடுக்க முடியவில்லை என்றால் சரிதான். அதனால் அந்த சொத்தை பாப்பாத்தியம்மாள் நரசிங்கத்திற்கு கிரையமாக கொடுத்துள்ளார் என எதிர்வழக்குரையில் சொல்லியுள்ளேன் என்றால் சொல்லியிருக்கலாம். அது தவறாகும். நரசிங்கத்திற்கு சொத்தில் பங்கு உள்ளது என்றால் இல்லை. கல் செக்கில் மட்டும் தான் பயன்படுத்தும் உரிமையுள்ளது. இந்த விபரங்கள் எனக்கு நேரடியாக தெரியாது. என் பெரியம்மா பாப்பாத்தியம்மாள் சொல்லி தெரியும். நரசிங்கத்திற்கு கிரையம் கொடுத்த விபரம் கோவில் நிர்வாகத்திற்கும், எனக்கும் தெரியும் என்றால் கொடுத்திருக்கலாம். செக்கைமட்டும் தான் கொடுத்துள்ளார். மனையை கொடுக்கவில்லை. அவ்வாறு செக்கை கொடுத்ததை ஒருபோதும் கோவில் நிர்வாகிகள் ஆட்சேபனை செய்யவில்லை என்றால் சரிதான். மீதமுள்ள இரண்டு ஆண்மக்களும் கோவிலுக்கு சொத்தை கொடுத்ததாக எந்த ஆவணமும் இல்லை என்றால் சரிதான். கோவிலுக்கு மட்டும் தான் சொத்து அனுபவம் உள்ளது என்பதற்கு ஆவணம் எதுவும் இல்லை என்றால் பரம்பரையாக அனுபவம் உள்ளது. ஆவணம் இல்லை. வாதிகள் கோரியபரிகாரம் அவர்களுக்கு கிடைக்கதக்கது என்றால் சரியல்ல.

(வாதிகளின் குறுக்குவிசாரணையை 1ம் பிரதிவாதி தரப்பில் ஏற்றுக்கொள்வதாக தெரிவிக்கப்பட்டது)

(ஒம்)எஸ். முருகவேல்,
கூடுதல் சார்பு நீதிபதி,
தென்காசி.